# மாநகரசபை, மட்டக்களப்பு
# வழங்குனர்களையும், ஒப்பந்தகாரர்களையும் பதிவு செய்தல்
# 2021

**01.01.2021** தொடக்கம் **31.12.2021** வரை கீழ்க்காணும் பொருட்களையும்,சேவைகளையும் ஒப்பந்தங்களையும் வழங்குவதற்காக மாநகர சபையுடன் தம்மை பதிவு செய்து கொள்ள விரும்பும் வழங்குனர்கள், ஒப்பந்தக்காரர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

கீழ்க்காணும் ஒவ்வொரு பொருட்களுக்கும் தனித்தனியாக விண்ணப்பங்கள் அனுப்பி வைக்கப்படல் வேண்டும். கடித உறையின் இடது பக்க மேல்மூலையில் "வழங்குனர்களை பதிவு செய்தல் – 2021"என குறிப்பிட்டு ஆணையாளர், மாநகர சபை, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு **2020.12.30**ந் திகதி அல்லது அதற்கு முன் கிடைக்குமாறு பதிவு தபாலில் அல்லது நேரில் வழங்க வேண்டும்.

| | **வழங்கல்கள்** | **மீளளிக்கப்படாத பதிவுக் கட்டணம்** |
|---|---|---|
| 1. | எழுத்து உபகரணங்களும் காகிதாதிகளும் | **ரூபா.1,500.00** |
| 2. | அலுவலக / தொழில்நுட்ப உபகரணங்கள் ( Photocopier, Dublicating Machine, Telephone & Faxes, Office Bags, Computers, UPS, Scanner, Printer, Computer software, computer network Accessories, ) | **ரூபா.1,500.00** |
| 3. | தளபாடங்கள் (பைலிங் கபினட்டுக்கள், உருக்கு கபினட்டுக்கள், மரத்தளபாடங்கள், Notice Board, Name board, கதிரைகள்) | **ரூபா.1,500.00** |
| 4. | மலசல தொட்டி வேலைகளுக்கான களஞ்சியப் பொருட்கள்(தும்புத்தடி, பிரம்புக் கூடைகள், ஈக்கில் தடிகள், கிருமி நாசினிகள், தெளிகருவிகள், குளோரின், சவர்க்காரம். கையுறை) | **ரூபா.1,500.00** |
| 5. | அச்சடித்தல் வேலைகள் | **ரூபா.1,500.00** |
| 6. | இரும்புச் சாமான்கள் | **ரூபா.1,500.00** |
| 7. | தீந்தைகள் | **ரூபா.1,500.00** |
| 8. | கட்டிட,வீதி வேலைகளுக்கான பொருட்கள் (ஆற்றுமணல்,கிறவல், சரளைக்கற்கள், செங்கற்கள், ஓடுகள், களிமண்) | **ரூபா.1,500.00** |
| 9. | நீர்விநியோகப் பொருட்கள்(பி.வி.சி பைப்புகள், குழாய்கள், பொருத்துக்கள் என்பன) | **ரூபா.1,500.00** |
| 10. | அரிந்த மரங்கள் (பலகை, ரீப்பை, கைமரம், திராந்தி, மரத்தூண், விறகு முதலியன) | **ரூபா.1,500.00** |
| 11. | எரிபொருட்கள் (பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய்) | **ரூபா.1,500.00** |
| 12. | மோட்டார் வாகன உதிரிப்பாகங்கள் | **ரூபா.1,500.00** |
| 13. | வாகனங்களுக்கான பற்றறி | **ரூபா.1,500.00** |
| 14. | வாகனங்களுக்கான டயர் மற்றும் டியூப் | **ரூபா.1,500.00** |
| 15. | மின்சாரப் பொருட்கள் (வயர், மின்குமிழ், சுவிட்ச், மின்இணைப்பு உபகரணங்கள்) | **ரூபா.1,500.00** |
| 16. | பிரின்டர் டோனர், பிரின்டர் றிப்பன், பிரின்டர் மை | **ரூபா.1,500.00** |
| 17. | நூலகங்களுக்கான புத்தகங்கள் விநியோகித்தல் | **ரூபா.1,500.00** |
| 18. | கனரக வாகனங்களை வாடகைக்கு வழங்கல் (Backhoe, Dozer, Caterpillar) | **ரூபா.1,500.00** |
| 19. | கோலவுடை விநியோகம் செய்தல், தைத்து வழங்குதல் ( Raincoat, Tea shirts and etc..) | **ரூபா.1,500.00** |
| 20. | உணவு, சிற்றுண்டி, மென்பானங்கள், தண்ணீர்ப்போத்தல்கள். | **ரூபா.1,500.00** |
| 21. | பத்திரிகைகள், சஞ்சிகைகள் விநியோகம் செய்தல் | **ரூபா.1,500.00** |

| | | |
|---|---|---|
| | **சேவைகள்** | |
| 22. | கட்டிடங்களை பழுது பார்த்தலும், பேணலும் | **ரூபா.1,500.00** |
| 23. | மோட்டர் வாகனங்களை பழுதுபார்த்தலும், சேவிஸ் இடுதலும் | **ரூபா.1,500.00** |
| 24. | தளபாடங்கள், அலுவலக உபகரணங்கள் பழுதுபார்த்தல் | **ரூபா.1,500.00** |
| 25. | கணணிகள், குளிரேற்றிகள் ,றோணியோ இயந்திரங்கள், நேரப்பதிவு இயந்திரங்கள், நிழல் பிரதி இயந்திங்களை திருத்துதலும் சேவிஸ் செய்தலும் | **ரூபா.1,500.00** |
| 26. | போட்டோ பிரதி இயந்திரம் திருத்துதலும் சேவிஸ் செய்தலும் | **ரூபா.1,500.00** |
| | **ஒப்பந்தம்** | |
| 27. | கட்டடம் | **ரூபா.5,000.00** |
| 28. | வீதி வேலைகள் | **ரூபா.5,000.00** |
| 29. | அலுமினிய பொருத்து வேலை | **ரூபா.1,500.00** |
| 30. | மீன் இணைப்பு வேலை | **ரூபா.1,500.00** |
| 31. | நீர்குழாய் பொருத்து வேலை | **ரூபா.1,500.00** |
| 32. | Ready Mix Concrete விநியோகம் செய்தல் | **ரூபா.1,500.00** |
| 33. | Asphalt Concrete விநியோகம் செய்தல் | **ரூபா.1,500.00** |
| 34. | Tar விநியோகம் செய்தல் | **ரூபா.1,500.00** |

மேலே குறிப்பிட்ட ஒவ்வொரு இலக்கங்களுக்கு எதிராக குறிப்பிடப்பட்டுள்ள மீளளிக்கப்படாத பதிவு கட்டணங்களானது ஆணையாளர், மாநகரசபை, மட்டக்களப்பு எனும் பெயரில் இலங்கை வங்கி கணக்கு இலக்கம் 012-0002698521 இற்கு வைப்பிலிட்ட பற்றுச்சீட்டினை (Deposit Slip) பதிவு செய்வதற்கான விண்ணப்பக்கடிதத்துடன், வியாபார அனுமதிப்பத்திர சான்றிதழின் பிரதியையும் இணைத்து அனுப்புதல் வேண்டும். (பதிவு செய்வதற்கான விண்ணப்ப படிவமானது ஆணையாளர், மாநகர சபை, மட்டக்களப்பு என்ற முகவரிக்கு சுயமாக தங்களது நிறுவன கடிதத் தலைப்பில் தயாரிக்கப்படல் வேண்டும்)

பதிவு செய்யப்பட்ட வழங்கல்,சேவைக்காக வழங்குனர்களிடமிருந்து, ஒப்பந்தக்காரர்களிடமிருந்து கூறுவிலை கோரப்படும். பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து போதுமான விண்ணப்பங்கள் கிடைக்காத சந்தர்ப்பங்களில் ஏனைய வழங்குனர்களிடமிருந்தும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் கூறுவிலை கோரவும், கொள்வனவு செய்யவும் மட்டக்களப்பு மாநகர சபை ஆணையாளருக்கு உரிமையுண்டு. குறிப்பிட்ட கால எல்லைக்குள் கூறுவிலைகளைச் சமர்ப்பிக்கத் தவறும் அல்லது கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டு உரிய காலத்தினுள் நிறைவேற்றத்தவறும் அல்லது வழங்கப்பட்ட சேவைகள், பொருட்கள் கோரப்பட்ட தரத்திற்கும் வழங்கப்பட்ட விபரக்கூற்றுகளுக்கும் ஏற்ப அமையத்தவறும் வழங்குனர்களின், ஒப்பந்தக்காரர்களின் பெயர்கள் அறிவித்தலின்றி பதிவேட்டிலிருந்து நீக்கப்படும். ஏற்கனவே தவறிழைத்த வழங்குனர்களிடமிருந்தும், ஒப்பந்தக்காரர்களிடமிருந்தும் விண்ணப்பம் ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது என்பதை தயவு செய்து கவனத்திற் கொள்ளவும்.

குறிப்பு – மாநகர எல்லைக்குள் உள்ள வழங்குனர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.

மாணிக்கவாசகர் தயாபரன்,
மாநகர ஆணையாளர்.

மாநகர சபை, மட்டக்களப்பு.
09.12.2020.